

# அண்ணாவும் நானும்

சி.அ.யோதிலிங்கம்

# முன்னுரை

"அண்ணாவும் நானும்" என்ற இச்சிறு நூல் காலம் சென்ற எனது சகோதரர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் ஞாபகார்த்தமாக எழுதப்பட்டது. அவர் மரணத்தை ஒட்டி 31வது தினத்தில் "சிவத்தமிழ் வித்தகம்" எனும் நூல் அவரது குடும்பத்தினரால் வெளியிடப் பட்டபோது. அந்நூலில் அடங்கிய கட்டுரையே இதுவாகும். தற்போது செப்பனிடப்பட்டு தனியான நூல் வடிவில் வெளியிடப்படுகின்றது.

தமிழ் பண்பாட்டு வரலாற்றில் ஒரு கட்டத்தை நகர்த்தியவர் களில் அண்ணாவும் ஒருவர். ஒரு ஆசிரியராக, விரிவுரையாள ராக, சமய உரையாளராக, சமய ஆய்வாளராக, அரச நிர்வாகியாக, தொழிற்சங்க செயற்பாட்டாளராக அவரது பணி பரந்திருந்தது. பண் பாட்டு வரலாறு பற்றி ஆய்வு மிகத் தேவையாக இருக்கின்ற இக்கால கட்டத்தில் இவரது பணிகள் பற்றிய மீளாய்வு அதிக பயனுடையதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

நீண்ட யுத்தம் காரணமாக தமிழ்ச் சமூகம் முற்றாகவே சிதைந்து போயுள்ளது. சமூகத்தின் பண்பாட்டு வேர்கள் பலவீனப்பட்டு போயுள்ளன. இளைய தலைமுறை திக்கு தெரியாமல் சீரழிந்து கொண்டு வருகின்றது. இவற்றையெல்லாம் சரி செய்து தமிழ்ச் சமூகத்தை தூக்கி நிறுத்த வேண்டியுள்ளது. பண்பாட்டுப் புரட்சி ஒன்றின் மூலமே இவற்றையெல்லாம் சாத்தியமாக்க முடியும்.

இதற்கு தமிழ்ப்பண்பாடு பற்றிய தேடுகை, மீளுருவாக்கம் அவசியம். சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் பற்றிய மீளாய்வு இதற்கு பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன். இந்நூல் பற்றிய அபிப்பிராயங்களை அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

சி.அ.யோதிலிங்கம்
"சந்திரா"
குப்பிளான், ஏழாலை.

எனது அண்ணா சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கடந்த மாசி 13ம் திகதி காலமானார். என்னைத் தூக்கி வளர்த்து ஆளாக்கியவர் என்ற வகையில் எனக்கு அது பேரிழப்பு. அதைக் கூட ஒருவகையில் தாங்கிக் கொள்ளலாம். அவர் எனது அண்ணா மட்டுமல்ல, தமிழ் பண்பாட்டுச் சொத்து. தமிழ் பண்பாட்டு வரலாற்றில் அவருக்கு ஒரு தனியிடம் இருக்கின்றது. அந்த பண்பாட்டுச் சொத்திழப்பைத் தாங்கிக் கொள்வதுதான் மிகவும் கடினமாக உள்ளது.

தமிழ் அரசியல் வரலாறு போலவே தமிழ் பண்பாட்டு வரலாறு என ஒன்று இருக்கின்றது. இந்த வரலாற்றில் ஒரு கட்டத்தை நகர்த்து வதில் பங்காற்றிய பெருமை அண்ணாவிற்கு உண்டு. அதுவும் போர் நடைபெற்ற நெருக்கடியான காலத்திலும் பின்னர் போரின் தாக்கம் நிலவிய காலத்திலும் இவரது பணி அளப்பற்றது

போர்க்காலத்தில் சகல வழிகளினாலும் பண்பாடு சிதைக்கப் பட்ட போது அதனைப் பாதுகாக்கவேண்டியிருந்தது. போருக்குப் பின்னரான காலம் போர்க்காலத்தை விட பண்பாட்டிற்கு சவாலான காலமாக இருந்தது. மரபு ரீதியான பண்பாட்டு விழுமியங்கள் சிதைக்கப்பட்டு பண்பாட்டுக் காவிகளாக இருக்க வேண்டிய இளைஞர்கள் சீரழிவு கலாச்சாரத்திற்குள் உள்ளீர்க்கப்பட்ட காலம் அது. மிகப் பக்குவமாக சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருந்தது. சமூக அக்கறையும், அளவுக்கதிகமான பொறுமையும் இல்லாமல் இந்தப் பணியை மேற்கொள்ள முடியாது.

தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் அவரது வகிபாகம் பன்மைத் தன்மை வாய்ந்தது. அதில் முதலாவது ஆசிரியப்பணி. மிக நீண்ட காலம் ஒரு ஆசிரியராக, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக, பிற்காலத்தில் முதுமானிப்பட்ட மாணவர்களுக்கான பல்கலைக்கழக விரிவுரையாளராக அவர் பணியாற்றினார். அவரது பணிக்காலத் தின் பெரும்பகுதி ஆசிரியர் பணியிலேயே இருந்தது எனலாம். எமது குடும்பத்தில் நானும் அவரும் தான் நீண்ட காலம் பாடசாலை மாணவர்களுக்கான ஆசிரியப் பணியில் இருந்தவர்கள். எமது மூத்த சகோதரர் சிவ கணேசலிங்கம் நைஜீரியாவில் ஒரு சில வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றினாலும் பின்னர் நிரந்தரமாக பல்கலைக்கழக விரிவுரையாளராகிவிட்டார்.

ஒரு ஆசிரியருக்குரிய விழுமியங்களை நான் அவரி னூடாகவே கற்றுக் கொண்டேன். அதுவும் நம்மிருவரதும் பெரும் பாலான கால ஆசிரிய வாழ்க்கை கட்டிளமைப் பருவ மாணவர் களுடனேயே இருந்தது. அண்ணா ஆண்களும், பெண்களும் கற்கின்ற பாடசாலைகளிலும், பின்னர் ஆசிரியர் கலாசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பித்த போதும் (யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியமை விதிவிலக்கு) நான் எனது 22 வருட ஆசிரிய வாழ்க்கையையும் பெண்கள் கல்லூரியிலேயே மேற் கொண்டேன். கொழும்பு மாநகரின் புகழ் பெற்ற பெண்கள் கல்லூரி யான கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம் கல்லூரியில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு கற்பித்து வந்தேன். தனியார் நிலைய கற்பித்தல்கள் விதிவிலக்காக இருந்தது.

ஆசிரியர் பணியில் அண்ணாவிடம் கற்றுக் கொண்ட விடயங்களில் இரண்டு முக்கியத்துவம் வாய்ந்தவை, ஒன்று மாண வர்களை அளவு கடந்து நேசிப்பது, இரண்டாவது மாணவர்களை திட்டமிட்டு வளர்த்தெடுப்பது. அதனூடாக எங்களுக்கென்று ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்குவது. **"மாணவர்கள் தொடர்பாக அண்ணாவிடம் ஒரு கொள்கை இருந்தது. மாணவர்கள் தவறு செய்யக்கூடியவர்கள். எதிரிகளைக் கையாள்வது போல மாண**

**வர்களைக் கையாளக் கூடாது"** மாணவர்கள் தவறு செய்தால் ஆசிரியருக்கு கவலை வரவேண்டுமே தவிர கோபம் வரக்கூடாது என்பதே அக் கொள்கை. போருக்கு பின்னர் தமிழ் இளைஞர்கள் சீரழிந்து செல்கின்றார்கள் இவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். என்ற அபிப்பிராயம் மேலோங்கிய காலத்தில் கூட யாழ் இந்துக்கல்லூரியில் நடந்த ஒரு நிகழ்வில் "இளைஞர்கள் வானத்தி லிருந்து குதிக்கவில்லை எமது சமூகத்திலிருந்தே தோற்றம் பெற்றனர். தவறுகளுக்கு அவர்களை மட்டும் குற்றம் சுமத்த முடியாது. எதிரிகளைக் கையாள்வது போல அவர்களைக் கையாளக்கூடாது. இது விடயத் தில் எங்களுக்கு கவலை வர வேண்டுமே தவிர கோபம் வரக்கூடாது" எனப் பகிரங்கமாகக் குறிப்பிட்டார். "மிகக் கவனமாக அவர்களை நல் வழிப்பாதைக்கு கொண்டு வரவேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

இரண்டாவது விடயம் மாணவர்களை திட்டமிட்டு வளர்த் தெடுப்பது. கல்வியலில் கற்க முடியாத மாணவர்கள் என எவருமில்லை. எல்லோரிடமும் ஆற்றல்கள் மறைந்திருக்கின்றது. அதனை வெளியே இழுத்தெடுத்து நெறிப்படுத்துவது தான் ஆசிரியப்பணி. அதற்கு முதலில் மாணவனை அறிய வேண்டும். அவனது உள, உடல், சமூக நெருக் கடிகளை அறிய வேண்டும். அதற்கு முதலில் மாணவனை அளவு கடந்து நேசிக்க வேண்டும். அவனது சுமைகளில் ஒரு பகுதியை ஆசிரியரும் சுமக்கத்தயாராக இருக்க வேண்டும். ஆசிரியரில் நம்பிக்கை வந்து விட்டால் போதும் பெட்டிப்பாம்பு போல மாணவர்கள் அவரைப் பின்தொடர்வார். அதன் பின்னர் கற்பிப்பது, வளர்த்தெடுப்பது எல்லாம் பெரிய காரியமல்ல. அதுவும் கட்டிளமைப்பருவ மாணவர்களைப் பொறுத்த வரை ஒரு ஆசிரியரின் வகிபங்கு ஆசிரியராக மட்டும் இருப்பதல்ல. ஒரு நல்ல தந்தையாகவும், ஒரு நல்ல நண்பனாக வும் இருக்க வேண்டும். இவை அண்ணாவின் தாரக மந்திரங்களாக இருந்தன.

அண்ணாவின் கைகளுக்குள்ளால் வளர்ந்த பலர் பெரிய கல்வியாளர்களாக பெரிய பதவிகளில் இருக்கின்றனர். மருத்துவர் களாக பொறியியலாளர்களாக, அரசாங்க அதிகாரிகளாக, ஆசிரியர்

களாக, அதிபர்களாக, விரிவுரையாளர்களாக இருக்கின்றனர். அவர்கள் பெரிய பதவிகளில் இருப்பது மட்டுமல்ல. சமூக அக்கறையுள்ள நல்ல மனிதர்களாகவும் உள்ளனர்.

நான் கற்ப்பித்த கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம் கல்லூரி வசதி படைத்தவர்களுக்கான பாடாசாலையாகியிருந்த போதும் க.பொ.த. உயர்தரத்தில் மிகவும் வறிய மாணவர்களும் வந்து சேர்ந்தனர். அதுவும் கலைப்பிரிவில் அவர்களே அதிகம். கொழும்பில் தோட்டங்கள் என அழைக்கப்படுகின்ற தொடர்குடியிருப்புக்களில் வாழ்பவர்களே அவர்கள். அங்கு ஒரு அறை கொண்ட வீடுகளே அதிகம். கற்க்கக் கூடிய வசதிகள் எதுவும் பெரியளவிற்கு கிடையாது. புறச் சூழலும் கற்பதற்கு ஏற்றதல்ல. அந்த மாணவிகளை மிகவும் கரிசனையுடன் அன்பு செலுத்தி வழிநடத்த வேண்டிய பொறுப்பு இருந்தது. கல்லூரிக்கு புறம்பாக கொட்டாஞ்சேனையில் பிரபலமாக இருக்கும் தனியார் கல்வி நிலையமான "ஏ.சி.ஏ" கல்வி நிலையத்திலும் கற்பித்து வந்தேன். அங்கு கற்க வந்தவர்களிலும் பெரும்பாலானவர்கள் இத் தோட்டப்புறங்களைச் சேர்ந்தவர்களும், சேரிப்புறங்களில் வாழ்ந்தவர்களுமே! அண்ணாவின் வழிகாட்டல் இவர்களை வழிப்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருந்தது. சிலருக்கு கல்விச் செலவிற்கும் பணம் கொடுத்து வந்தேன். கொழும்பில் உள்ள பத்திரிகை நிறுவனங்களிலும், தனியார் வர்த்தக நிறுவனங்களிலும் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் எனக்கு தெரிந்தவர்களாக இருந்ததினால் க.பொ.த. உயர்தரம் முடிந்தவுடன் வேலைகளையும் பெற்றுக் கொடுத்தேன். அப்போது கூட எனது நிபந்தனை "தொடர்ந்து கற்க வேண்டும்" என்பதே. இன்று பலர் சட்டத்தரணிகளாகவும் பத்திரிகையாளராகவும், ஆசிரியர்களாகவும், அதிகாரிகளாகவும் உள்ளனர். சேரிப்புறத்தில் இருந்து வந்த ஒரு மாணவன் "உங்களைச் சந்திக்காவிட்டால் ஏதாவது இரும்புக் கடையில் சாம்பிராணி காட்டிக் கொண்டிருந்திருப்பேன்" எனக் கூறினான். இன்று அவன் ஒரு பட்டதாரியாக உயர்பதவியில் இருக்கிறான்.

அண்ணாவின் இரண்டாவது பணி சமயப் பிரசங்கம் மூலம் சமய விழிப்பூட்டலாகும். இந்த இடத்தில் நாவலரின், வழியை அவர் பின்பற்றினார். அண்ணாவின் ஓய்வு நேரத்தை அதிகளவில் இச் சமயப் பிரசங்கமே எடுத்திருந்தது. மிகத்தூர இடத்திலிருந்து வந்து கேட்டால் கூட சென்று விடுவார். பிரதியுபகாரம் எதுவும் எதிர்பார்ப்பதில்லை. கேட்டால் அது எனது கடமை என்பார். பிற மாவட்டங்களில் உரை யாற்றச் சென்றால் மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து வீட்டிற்கு வராமலே தங்கி நின்று உரையாற்றுவார். எனது வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பு வாழைச்சேனை கறுவாக்கேணி முத்து மாரி அம்மன் கோவிலில் தொடர்ந்து ஐந்து நாட்கள் உரையாற்றினார். அவரை உரையாற்ற ஒழுங்கு செய்து தருமாறு கேட்ட எனது நண்பன் அவரது உரையைப் போல ஒரு உரையை இது வரை கேட்க வில்லை என ஊரவர்கள் கூறியதாகக் கூறினான். இவரது பிரசங்கப் பணி இலங்கைத் தீவோடு மட்டும் நிற்கவில்லை. கனடா, இங்கிலாந்து எனத் தொடர்ந்தது.

அண்ணாவின் பிரசங்கப்பாணி மிகவும் வித்தியாசமானது பல்வேறு இடங்களுக்கும் சென்று மைய விடயத்திற்கு வருவது அவரது பாணி. திருவள்ளுவர், திருமூலர், அருணகிரிநாதா, நாவலர், பாரதி, நாயன்மார்கள் அனைவரும் அவரது உரையில் வந்து போவர். பரந்த வாசிப்பும், தேடலும், அறிவும் இல்லாமல் பலரது கருத்துக் களையும் மையப் பொருளுடன் இணைக்க முடியாது. உரை முழுவதும் அறநெறிக் கருத்துக்கள் மேலோங்கியிருக்கும். ஊசி விழுந்த சத்தம் கூடக் கேட்காது. மக்கள் அனைவரும் ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பர். உரையின் கட்டமைப்பு ஒரு சங்கிலித் தொடர்பு போல நேர்த்தியாக இருக்கும்.

அண்ணாவின் மூன்றாவது பங்கு சமயப்பிரசாரகர்களை பயிற்றுவித்தலாகும் சத்தியதாசன், வலீசன், பாலசண்முகன் போன்றோர் சிறந்த சமயப் பேச்சாளர்களாக இன்று எழுச்சியடைந் துள்ளனர். இவர்கள் வெறும் பிரச்சாரகர்களாக அல்லாமல் கல்வியாளர்களாகவும் சமூக அக்கறையுள்ளவர்களாகவும் மிளிர்

கின்றனர். சமய அறநெறிக்கருத்துக்களை உயிரோட்டமாக சமூகத்திற்கு கொண்டு செல்லல் என்பதில் இவர்கள் அரும்பணி யாற்றுகின்றனர்.

அவரது நான்காவது பணி சமய நூல்களை வெளியிடுவ தாகும். இதுவும் நாவலர் வழி வந்த ஒரு பணி தான். திருமுறைச் செல்வம், ஞான விளக்கம், முருகமந்திரம், சைவசித்ததந்தமும் ஈழத் தமிழ் அறிஞர்களும் போன்ற பலநூல்களை எழுதியுள்ளார். இவை தவிர நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். எனது வேண்டுகோளுக்கிணங்க க.பொ.த. உயர்தர மாணவர்களுக் காகவும் பட்டதாரி மாணவர்களுக்காகவும் "இந்து நாகரிகம்" என்ற நூலையும் எழுதியிருந்தார் "ஈழத்துச் சித்தர்கள்" பற்றிய நூலை அவர் இறுதியாக எழுதிக் கொண்டிருந்தார். அது முழுமையடையும் நிலையிலேயே மரணம் ஏற்பட்டிருக்கிறது.

அண்ணாவின் ஐந்தாவது பங்களிப்பு சமய ஆய்வுப்பணி யாகும். இவ்விடயம் சைவ சமயப்பரப்பில் அதிகம் அக்கறை செலுத்தாத விடயம். ஆனால் இன்றைய நிலையில் மிகவும் தேவையான விடயம். ஆய்வு நிலைப் பரிசீலனை இல்லாமல் சமய விவகாரங்களை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. போதாமைகளை செப்பனிட முடியாது. சமய வளர்ச்சியில் நாவலரின் பங்கு பற்றி இவர் ஆற்றிய நினைவுப் பேருரை அவரது ஆய்வு முயற்சியில் ஒரு மைல் கல் எனலாம். தமிழ்க் கல்வி பற்றி வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நிகழ்த்திய உரையும் ஆய்வுப் பணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஆறாவது பங்களிப்பு அவரது சமய நெறி வாழ்வாகும். சமய அற நெறிகள் பற்றிப் பேசுவது எளிது, ஆனால் வாழ்ந்து காட்டுவது மிகவும் கடினம். அண்ணா வாழ்ந்து காட்டினார். தனது குடும்பத்தை யும் அவ்வாறு வாழச் செய்தார். இன்று குடும்பம் முழுவதுமே சைவ உணவுக்காரர்கள். பிள்ளைகள் வெளிநாடுகளில் பணி யாற்றினாலும் தூய சைவ உணவுக்காரர்களாகவே உள்ளனர்.

அண்ணாவைப் பின்பற்றியே நானும் சைவ உணவுக்காரனாக மாறினேன். காடு, கரம்பை, வெளிநாடுகள் எனச் சென்ற போதும் சைவ உணவுப் பழக்கத்தைக் கைவிடவில்லை.

ஏழாவது பங்களிப்பு அவர் ஒரு சிறந்த நிர்வாகி. அவரது அரச பணிக்காலத்தில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உப அதிபராக, அதிபராக இருந்த போதும் இந்து கலாச்சாரத்திணைக் களத்தில் உதவிப்பணிப்பாளராக கடமையாற்றிய போதும் சிறந்த நிர்வாகியாக இருந்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பணியாற்றிய போது ஆசிரிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் பல திட்டங்கள் உருவாக்கிச் செயற்படுத்தினார். பணிப்பாளராக கடமையாற்றிய போது அறநெறிப்பாடசாலைகள் உட்பட பல திட்டங்களைச் செயற்படுத்தினார்.

எட்டாவது பங்களிப்பு மலையக மக்கள் மத்தியில் மேற் கொண்ட பணியாகும். அவரது ஆசிரியப் பணியின் தொடக்க காலம் மலையகமாகவே இருந்தது. 21 ஆவது வயதில் ஆசிரியப் பணியில் சேர்ந்ததும் எட்டியாந்தோட்டை மகாவித்தியாலய்திலேயே கற்பித்தார். கணித பாடமே இவரது பிரதான பாடமாக இருந்தது. மலையக மாணவர்கள் குறிப்பாக க.பொ.த சாதாரண தர மாணவர்கள் கணிதம் கற்பதில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். பரீட்சைப் பெறுபேறுகளும் சிறப்பாக இருக்கவில்லை. அவர் முதலில் கணித பாடம் தொடர்பான பயத்தைப் போக்கினார். கணிதம் ஒரு கஸ்டமான பாடமல்ல என்ற நம்பிக்கைகைய ஊட்டினார். மிகக் கரிசனையுடன் அடிப்படை யில் இருந்து கற்பித்தார். பாடசாலை முடிந்த பின்னரும் வீட்டிற்கு அழைப்பித்து கற்பித்தார். சனி, ஞாயிறு தினங்களிலும் ஓய்வெடுப்ப தில்லை. கற்கச் சிரமப்படும் மாணவர்களை அழைத்து பரிகாரக் கற்பித்தலை மேற்கொண்டார். அவரிடம் கற்ற மாணவர்கள் அனைவரும் கணிதத்தில் அந்த வருடமே சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர்.

இடைக்காலத்தில் இரண்டு வருடங்கள் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் கற்ற போதும் ஆசிரியப் பயிற்சி

முடிந்ததும் மீண்டும் எட்டியாந்தோட்டையிலேயே ஆசிரியப் பணியை மேற்கொண்டார். ஆரம்பத்தில் சிங்கள – தமிழ் கலப்புப் பாடசாலை யாக இருந்த எட்டியாந்கோட்டை மகாவித்தியாலயத்தில் கற்பித் தவர் ஆசிரியர் பயிற்சியின் பின்னர் தமிழ்ப்பாடசாலையான எட்டியாந் தோட்டை சென்மேரிஸ் வித்தியாலத்தில் கற்பித்தார்.

இவரிடம் கற்ற ராஜ்குமார் என்ற மாணவன் க.பொ.த உயர்தர கணிதப் பிரிவில் கற்க விரும்பினான். எட்டியாந்தோட்டையில் கணிதப் பிரிவு இருக்கவில்லை. அம்மாணவனை யாழ்ப்பாணம் அழைத்துவந்து தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் கற்க வைத்தார். எங்கள் வீட்டி லிருந்தே அவன் கல்லூரிக்குச் சென்று வந்தான். அவனது கல்விச் செலவு களை தானே பொறுப்பேற்றார். அவன் தற்போது அவுஸ்ரேலியாவில் இருக்கின்றான்.

மலையகத்தில் அவர் மேற்கொண்ட இரண்டாவது பணி எட்டி யாந்தோட்டை இந்துமாமமன்றத்தை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியமையாகும். இதன் மூலம் சைவ விழிப்புணர்ச்சியை ஊட்டியதுமல்லாமல் சைவ வாழ்வு முறைக்கும் இளைஞர்களைப் பயிற்றுவித்தார். வாணி விழா, சிவராத்திரி விழா என்பனவும் இந்துமாமன்றத்தால் கொண்டாடப்பட்டன. விழாக்களின் போது மாணவர்கள் மத்தியில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பவற்றை நடத்தி அவர்களை ஊக்குவித்தார். 2014 ஆம் ஆண்டு இந்து மாமன்றம் தனது 40 ஆவது ஆண்டு விழாவில் அண்ணாவையும் துணைவியாரையும் பிரதமவிருந்தினராக அழைத்து "திருவாசகச் செம்மல்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது.

மலையகத்தில் அவர் மேற்கொண்ட மூன்றாவது பணி கேகாலை மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்க கிளையை உருவாக்கி அதன் செயலாள ராக பணியாற்றியமையாகும். மலையக ஆசிரியர்களின் தொழில் சார் பிரச்சனைகளை தமிழர் ஆசிரியர் சங்கத்தினூடாக அவர் தீர்த்து வைத்தார். எட்டியாந்தோட்டையிலிருந்து கேகாலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகி வந்த பின்னரே தொழிற்சங்க

செயற்பாட்டில் அதிகம் ஈடுபட்டார். மாவட்டக் கிளையினால் தீர்க்க முடியாத ஆசிரியர்களின் தொழில் சார் பிரச்சனைகளை தொழிற் சங்க தலைமை மூலம் தீர்த்து வைத்தார். அப்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த மகாசிவம் அவர்கள் இதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கினார். கேகாலை தமிழ் மகா வித்தியாலய அதிபராக இருந்த எழுத்தாளர் கோமஸின் ஒத்துழைப்பும் இவருக்கு தாராளமாகக் கிடைத்தது.

மலையகத்தில் அவரது நான்காவது பணி மலையக அரசியலுக்கு உதவியமையாகும். அன்று மலையகத்தில் செல்வாக்குள்ள அமைப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரசே இருந்தது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினை ஆதரித்தது. இதற்கப்பால் தலைவர் தொண்டமான் மீது அவருக்கு ஆழ்ந்த பற்றும் மதிப்பும் இருந்தது. இது விடயத்தில் வட – கிழக்கு தமிழ் அரசியல் தலைவர்களை விடவும் தொண்டமான் மீது பற்று சற்று அதிகம் எனலாம். இவரது கணிப்பின்படி தொண்டமான் துணிந்த சாணக்கியம் மிக்க தலைவர்.

மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால் மலையக மக்கள் நீண்டகாலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கவில்லை. 1977ம் ஆண்டு தேர்தலில்தான் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய சூழல் ஏற்பட்டது. அதுவும் நுவரெலியா மஸ்கேலியா என்கின்ற மூன்று அங்கத்தவர் தொகுதி உருவாக்கப்பட்டதன் பின்னரே ஏற்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இதற்காக தேர்தல் பிரச்சாரத்தில் இவரும் பங்கு பற்றினார். ஹட்டனில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்குபற்றி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கேகாலை மாவட்ட கிளையின் சார்பில் உரையாற்றினார். இத்தேர்தலில் தொண்டமான் நுவரெலியா மஸ்கேலியா தொகுதியின் மூன்றாவது உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர்தான் மலையகத்தில் பிரதிநிதித்துவ அரசியல் வளர்ச்சியடைய தொடங்கியது.

இவர் கேகாலையில் கற்பித்த போது தான் 1977ம் ஆண்டு இனக்கலவரம் ஏற்பட்டது. அந்நேரம் நானும் அவர்களுடன் இருந்தேன். கொழும்பு – கண்டி பிரதான வீதியில்தான் எமது வீடு இருந்தது. இனக் கலவரம் கேகாலைக்குப் பரவிய போது ஒரு குழு எமது வீட்டிற்கு முன்னாலேயே பஸ்களை மறித்து தமிழர் இருக்கிறார்களா? என விசாரித்து தாக்க முற்பட்டது. அண்ணா வீட்டில் இல்லை. கேகாலை நகரத்திற்கு சென்று விட்டார். வீட்டில் நானும் அண்ணியும் கைக் குழந்தையான அவரது மூத்த மகன் மருத்துவர் அரவிந்தனும் மட்டும் தான். ஊர் மக்கள் எங்களுடன் நேசமாக இருந்ததனால் எங்களைக் காட்டிக்கொடுக்கவில்லை. எமக்குப் பாதுகாப்பாக நின்றனர். அண்ணாவை காணவில்லை என அண்ணி அழத்தொடங்கி விட்டார். அருகில் இருந்த சிங்கள இனத்தவர்கள் எமக்கு ஆறுதல் கூறினர். "தெல் மாமா" என அரவிந்தன் அழைக்கின்ற முதிய சிங்கள வியாபாரி எங்களின் பாதுகாப்பிற்கு உறுதுணையாக நின்றார். சில மணி நேரங்களில் அண்ணா வந்து விட்டார். அயலவர் கள் எம்மைப் பாதுகாப்பதற்கு ஊரின் உட்பகுதிக்கு அழைத்துச் சென்று ஒரு வீட்டில் தங்க வைத்தனர். ஊரவர்கள் சிலர் தமிழர் களுக்கு ஏன் பாதுகாப்புக் கொடுக்கின்றீர்கள் என்று கேட்ட போதும் எம்மைப் பாதுகாத்தவர்கள் அதனைக் கணக்கெடுக்கவில்லை.

இரவில் ஒரே பாயிலேயே நாங்கள் படுப்போம். நான் எனக்கருகில் அண்ணா, அவருக்கு அருகில் அண்ணியும் கைக்குழந்தை யான அரவிந்தனும் என வரிசை நிலையில் படுப்போம். அண்ணா விற்கு ஏதாவது நடக்குமோ என்ற அச்சம் இருந்தது. நள்ளிரவில் எழும்பி பதட்டப்படுவார். ஒரு தடவை பதட்டத்துடன் எழுந்தார். நானும் எழுந் தேன், எனது கையைப் பிடித்து "ஏதாவது நடந்தால் அரவிந்தனை தூக்கிக்கொண்டு நீ தப்பி ஓடிவிடு. அவனை எப்படியாவது படிப்பித்து ஆளாக்கிவிடு" என்றார் நான் "எதுவும் நடக்காது பேசாமல் படுங்கோ" என்று கூறினேன். ஆனால் உள்ளூர எனக்கும் அச்சம் இருந்தது.

இனக்கலவரம் சற்றுத் தணிந்த போது நாம் கேகாலை நகரில் தபால் அதிபராக இருந்த தமிழர் ஒருவரின் வசிப்பிடத்திற்கு

மாறினோம். பின்னர் கலவரம் முற்றாகத் தணிந்த போது கேகாலை நகர மண்டப அகதி முகாமிற்கு சென்று, அங்கிருந்து இராணுவப் பாது காப்புடன் பொல்காவலை வந்து, புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

அண்ணாவின் பங்களிப்பில் பலருக்கு தெரியாத ஒன்று அவர் சிறந்த "கதை சொல்லி" என்பதாகும். தனிப்பட்ட உரை யாடல்களின் போதே இக்கதை சொல்லி அதிகம் வெளித்தெரிவார். சமய முன்னோடிகளின் வரலாறுகளை, அவர்களது வரலாற்றில் நிகழ்ந்த எழுத்தில் வராத சிறு சிறு நிகழ்வுகளைக் கதையாக சொல்வார். நாவலர், யோகர் சுவாமிகள், சேர் பொன் இராமநாதன் இந்து போட் இராஜரத்தினம், பாவலர் துரையப்பாபிள்ளை என்போரின் வரலாற்றில் நிகழ்ந்த சிறு சிறு சம்பவங்களை கதையாகச் சொல்வார். குறிப்பாக இந்து போர்ட் ராஜரத்தினம் இந்துப் பாடசாலைகளை கட்ட முயற் சித்த போதும் பாவலர் வரையப்பாபிள்ளை, மகாஜனாக் கல்லூரியை கட்ட முயற்சித்த போதும் பட்ட கஸ்டங்கள், சிரமங்களினை கதை யாகச் சொல்லும். போது உடம்பு சிலிர்க்கும். இவ்வாறான மகான்களும் தமிழ் சமூகத்தில் உள்ளனரா என எங்களைத் திகைக்க வைக்கும். கதை சொல்லும் போது அவர் காட்டும் உடல் மொழிதான் மிகவும் முக்கிய மானது. வாய் மட்டுமல்லாமல் உடம்பும் கதை சொல்லும். அந்த கதையில் இலட்சிய வெறி இருக்கும், சமூக அறநெறிகள் இருக்கும், எள்ளல் இருக்கும். தாங்க முடியாத சோகமும் இருக்கும். மகான்களின் வரலாறுகளை மட்டுமல்ல சமூக நிகழ்வுகளை, சமூக வரலாறு களையும் கதையாகச் சொல்வார். எனக்குள்ள மிகப் பெரும் கவலை இக் கதைகளை ஆவணமாக்காமல் விட்டது என்பதே! அவரது வரலாறு பற்றிய ஆவணப்படம் ஒன்றினைத் தயாரிக்கும் எண்ணம் இருந்தது. காலமும் சூழலும் அதற்குப் பொருந்தாததால் அது கைகூடவில்லை. அவரது வரலாறு என்பது வெறுமனே அவரது வரலாறல்ல. சமூகத்தின் வரலாறே

இறுதியாக எனக்கும் அவருக்கும் உள்ள தொட–ர்பு பற்றி கூறாவிட்டால் இக்கட்டுரை பூரணப்படாது என்பது எனது

அபிப்பிராயம். எனது அண்ணாமார்களில் என்னுடன் அதிக காலம் நெருக்கமாக வாழ்ந்தவர் சிவ மகாலிங்கம் தான். முதலாவது அண்ணர் கணேசலிங்கம் சிறிய வயதிலேயே சென்ஜோன்ஸ் கல்லூரி விடுதியிலும் பின்னர் கொழும்பு, லண்டன் எனப் படித்ததினா லும் பின்னர் நைஜீரியா, கனடா எனப் பணியாற்றியதனாலும் எங்களோடு வாழ்ந்த காலம் குறைவு. மூன்றாவது அண்ணர் முத்துலிங்கம் அம்மம்மாவுடன் வாழ்ந்ததினால் எங்களுடன் வாழ்ந்தது குறைவு. இவர் எங்களுடன் வாழ்ந்ததால் நான், அக்கா, தம்பி, தங்கை நால்வரும் இவரது கட்டுப்பாட்டிலேயே வாழ்ந்தோம். அப்பா வெளிமாவட்டங்களில் பணியாற்றியதால் வீட்டில் நிற்பது குறைவு. இதனால் தந்தையின் வகிபாகத்தையும் இவரே வகித்தார். எனது ஆரம்ப மொடல் இவர் தான். இவருக்கூடாகத்தான் நான் சமூகத்தைப் பார்த்தேன். சமயத்தையும் பார்த்தேன். நாங்கள் குழப்படி செய்யும் போது அம்மா முறையிடுவது இவரிடம் தான். நான் அதிகம் அடி வாங்கியதும் இவரிடம் தான்.

கோவிலோடு இணைந்த வாழ்க்கை எங்களுடையது. கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த திருவிழாக்கள் தொடங்கி விட்டால் இரவு, பகல் முழுவதும் நாங்கள் கோவிலில் தான். அண்ணா பிரார்த்தனை சபையின் தலைவராக, செயலாளராக இருந்தார். அவரைத் தொடர்ந்து நானும் பிரார்த்தனை சபையின் தலைவராக, செயலாளராக பணியாற்றினேன். பொதுப் பணியில் அக்கறையும், அறநெறிவாழ்க்கை மீதான பற்றும் அவருக்கூடாகவே எனக்குக் கிடைத்தது. என்னை ஒரு பேச்சாளராக்கியதும் அவர்தான். பிரார்த் தனை சபைப் பேச்சுப் போட்டியில் என்னையும் பேச வைத்தார். பல நாட்கள் பேச்சுப் பயிற்சியினை வழங்கினார். "சைவத்தின் பெருமை" என்பதுதான்அதன்தலைப்பு.முதல்பரிசுகிடைத்ததாகஞாபகம்.என்னிடம் அரசியல் ஆர்வத்தை தூண்டியவரும் அவர்தான். எட்டாம் வகுப்புப் படிக்கும் போது தமிழரசுக் கட்சியின் பிரச்சாரக் கூட்டங்களில் என்னைப் பேச வைத்தார். அவர் எழுதிக் கொடுக்க நான் பாடமாக்கிப் பேசினேன். பேசும் போது கூட்டத்தில் மறைந்து நின்று எந்த இடத்தில்

எவ்வாறு பேச வேண்டும். எவ்வாறு கை காட்ட வேண்டும் எனச் சைகை காட்டுவார். நானும் அவரது சைகைக்கேற்ப கைகாட்டிப் பேசுவேன். எமது கிராமத்தில் நடந்த பிரச்சாரக்கூட்டத்தில் பேசுவதற்காகத் தான் முதலில் ஆயத்தமானோம் ஆனால் பின்னர் மானிப்பாய் தொகுதி, கோப்பாய்த் தொகுதி, காங்கேசன் துறைத் தொகுதி, உடுப்பிட்டித் தொகுதி எல்லாம் பேச வேண்டியிருந்தது. எனது வாழ்வின் திருப்பு முனை இது தான். அன்று 14 வயதில் ஆரம்பித்த அரசியல் செயற்பாடு 62 வயதாகியும் இன்னமும் முடியவில்லை.

அன்று பேசிய உரையின் ஒரு பகுதி இன்னமும் வலுவாக நினைவில் உள்ளது அப்பகுதி இது தான்.

"பண்டைய நாகரீகத்தை பாரெங்கும் பரப்பிய தமிழன், பண் பாட்டுக் கலாச்சாரத்தை பேணி வளர்த்த தமிழன், வீரத்தின் இலக்காக விளங்கிய வெற்றித் தமிழன், தன் வாழ்நாளில் புற முதுகே காட்டாத மானத் தமிழன், குமரி முதல் இமயம் வரை மீனக்கொடி ஏற்றிய தமிழன் என்றெல்லாம் பழந்தமிழ்ப் புலவர்களால், பாரினில் வாழ்ந்த மக்களால், மனித சமுதாயத்தால் போற்றப்பட்ட தமிழன் இன்று மானமிழந்து, மதியிழந்து தன் ஆற்றலும் இழந்து அனாதைகளாக அந்நியர்களுக்கு அடி பணிந்து வாழும் காட்சியைப் பார்க்கும் போது அந்த சிங்காரத் தமிழனின் வழித்தோன்றலாகிய நாம் வேதனை விளிம்பில் விழவேண்டியிருக்கின்றதல்லவா? கவிக்கரசன் கம்பனை, குறள் வேந்தன் வள்ளுவனை, புரட்சிக்கவி பாரதியை, அறநெறி வழுவா மணிமேகலையை எல்லாம் பெற்றெடுத்த நாடு நம் நாடு என்ற பழம் பெருமையை பாடும் நாம், நமக்குள்ளே நம்மவரை அடிமைப் படுத்தி, கீழ்சாதி, மேல்சாதி எனக் கோத்திரமும் குலமும் பிரிக்கப் பட்டு தமிழனே தனக்குள் ஒரு மாபெரும் பிரிவினையை வளரக் கிறானென்றால் அந்நியர்கள் நம்மீது ஏறிச் சவாரி விடுவதில் யாதொரு தவறுமில்லை.

"சாதி ஒன்று இல்லையடி பாப்பா!
இது சான்றோர்கள் வகுத்ததடி பாப்பா!"

என்ற பாரதியின் பாட்டை அசட்டை செய்து விட்டு அவனுக்கு மணிமண்டபமும் மாபெரும் கோபுரமும் கட்டினால் போதாது. அவனுடைய உள்ளக் கிடக்கைகளை, உண்மை இலட்சியங்களை இந்தப் பாரினில் வாழும் மக்களின் மத்தியில் பசுமரத்தாணி போல பதியச் செய்ய வேண்டும்."

பிற்காலத்தில் "தமிழ்த் தேசியமும் சமூக மாற்றமும்" என்ற கொள்கையை நான் அழுத்தமாகப் பின்பற்றுவதற்கு அத்திவார மிட்டது இவ்வுரைதான். நான் ஒரு தீவிர அரசியல் செயற்பாட்டாளனாக மாறுவேன் என ஆரம்பத்தில் அவர் நினைத்திருக்கவில்லை. இதன் காரணமாக எனது தந்தையாரிடமும் நிறைய ஏச்சுக்களை வாங்கி யிருந்தார். அவரது வாழ்நாள் முழுவதும் என்னுடைய பாதுகாப்பு பற்றிய கவலை அவரிடம் இருந்தது. தான் வணங்கும் கடவுள் தான் என்னைக் காப்பாற்றியது என்பது அவரது நம்பிக்கை. "இனியாவது அரசியலை விடு" என அடிக்கடி கூறுவார். இனப்பிரச்சனை தீரும் போது விட்டு விடுவேன் எனப் பதில் அளிப்பேன்.

எனது அண்ணா சிவ மகாலிங்கம் தமிழ் பண்பாட்டு வரலாற்றில் ஒரு கட்டத்தை நகர்த்திய பெரும் மகான். அவரது பணிகளை ஏதாவது ஒரு வகையில் முன்கொண்டு செல்வதே அவருக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலியாக இருக்கும்.